ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் வர்த்தக அணி, இலக்கிய அணி, மகளிர் அணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். வாக்கு சேகரிப்பில் வர்த்தக அணி சக்தி பாலு, ரைஸ் மில் மா.சுப்பிரமணியன், இலக்கிய அணி எஸ்.ஏ.அன்பழகன், நெசவாளர் அணி பவானி கே.சரவணன் உள்ளிட்ட வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1-இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

நாள்	நேரம்	மண்டலம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
05.02.2025 புதன்கிழமை	மாலை 4.00 மணி	1	வேளச்சேரி	கபாலி திருமண மண்டபம், காந்தி சாலை, வேளச்சேரி, சென்னை.

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான

கண்டன பொதுக்கூட்டம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு

ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து வருகிற **பிப்ரவரி 8, சனிக்கிழமை, மாலை** தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கழகம் சார்பில் "**கண்டன பொதுக்கூட்டம்**" நடைபெறும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03.02.2025

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இறுதி கட்ட பிரச்சாரம்!

அமைச்சர் சு.முத்துசாமி தலைமை!

ஈரோடு, பிப். 5 -

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடை தேர்தல் இறுதி கட்ட பிரச்சாரம் நேற்று முன்தினம் (3.2.2025) இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் , அமைச்சருமான சு.முத்து சாமி தலைமையில் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் திறந்த வேனில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கிக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு இறுதி நாளில் வாக்குகள் சேகரித்தனர்.

இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி எஸ் எல்டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவகுமார் ஈரோடு இறைவன், வீரமணி, கள்ளிப்பட்டி மணி, மாவட்ட கழக நிர்வாகிகள் தெற்கு கே.குமார் முருகேஸ், ஆ.செந்தில் குமார், செல்லப்பொன்னி, க.சின்னையன், ப.க.பழனி ச்சாமி,, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மேயர் நாகரத்தினம்,

டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஏ.பெருமாள்சாமி, எஸ்.பி.புகழேந்தி, எம்.பி.அறிவானந்தம், கீதா நடராஜன், சம்பத்குமார், ராஜேந்திரன், நகர கழக செயலாளர்கள் பவானி ப.சீ.நாகராஜன், கோபி என்.ஆர்.நாகராஜ், சக்தி ஜானகி ராமசாமி, புளியம்பட்டி சிதம்பரம்,

ஒன்றிய கழக செயலாளர் வடக்கு கோபி சிறுவலூர் எஸ் .எ.முருகன், டி.என்.பாளையம் எம்.சிவபாலன், பவானி கே.பி.துரைராஜ், கேபிள் சேகர், அம்மாபேட்டை சரவணன், அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், தெற்கு கே.பி.,சாமி சு.குணசேகரன், பி.செங்கோட்டையன், விஜய குமார், கதிர்வேல், சின்ன சாமி, பெரியசாமி, ராஜா, சுப்பிரமணியம், ஈஸ்வர மூர்த்தி,

பகுதி கழக செயலாளர்கள் அக்னி சந்துரு, வீ.சி.நடராஜன், வி.செல்வராஜ், பொ.ராமசந்திரன், க.லட்சுமண குமார், குறிஞ்சி என்.தண்டபாணி, வில்லரசம்பட்டி முருகேசன், எஸ்.குமார வடிவேல் ஆகிய எட்டு பகுதி கழக செயலாளர்கள் மேலும் மொளசி ராஜமாணிக்கம், மேடமங்கலம் மோகன், வழக்கறிஞர் முனியப்பன், இறையமங்கலம் பெரியசாமி

தலைமை கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், ஈரோடு இளைய கோபால், கரூர் முரளி, தூத்துக்குடி சரசு பாலா, போடி காமராஜ், பொன்னேரி சிவா, அதிரடி அல்டாப் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளை திறந்த வேனில் வீதி வீதியாக சென்று பொது மக்களிடம் விளக்கி கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

மேலும் வாக்கு சேகரிப்பில் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், எஸ்.எஸ்.வெள்ளியங்கிரி, பவானி சிந்தூரி இளங்கோ, நெசவாளர் அணி பவானி கே.சரவணன் இலக்கிய அணி பவானி எஸ்.ஏ.அன்பழகன், வர்த்தக அணி சக்தி பாலு, வர்த்தக அணி ரைஸ் மில் மா.சுப்பிரமணியம் உள்ளிட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

வீ.ஜெகதீசன் தலைமை!

பெரம்பலூர் மாவட்டத்தில் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

வேப்பந்தட்டையில் அமைதிப் பேரணி!

பெரம்பலூர், பிப். 5 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்,சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில், பேரறிஞர் அண்ணா 56 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, வேப்பந்தட்டையில் அமைதி ஊர்வலம் சென்று, வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதே போல் கிருஷ்ணாபுரம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.அண்ணாதுரை, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்தி ரன், ந.ஜெகதீஷ்வரன், டாக்டர் செ.வல்லபன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமிசேகர், ஏ.எம்.ஜாகிர்உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், ஆர்.அருண், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், முன்னாள் பெருந்தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர்கள் கோபாலபுரம் செல்வராஜ், பாளை.மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா மற்றும் வனிதா சுப்ரமணி யன், ஆர்.வினோத், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இருந்து அமைதிப் பேரணி மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில் நடைபெற்றது. கரூர் மாநகர பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், க. சிவகாமசுந்தரி, கழக மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் என்.மணிராஜ் பரணி மணி, பல்லவி ராஜா , முனவர் ஜான், மாவட்ட கழக நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாநகர பகுதி, ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

12-ம் ஆண்டு
நினைவு அஞ்சலி
" கலைஞர் விருது பெற்ற "
மத்திய, மாநில அரசு நல்ஆசிரியர் விருது பெற்ற

தோற்றம் : 08.04.1920
மறைவு : 05.02.2013
திருமதி
பொற்செல்விஇளமுருகு
...என்றும் நினைவில் வாழும்...
பெ.ஆனந்த்குமார் B.Com., Ex.M.C.,
கரூர் மாவட்ட துணை அமைப்பாளர், தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி